7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப் செய்யப்பெற்றிருக்கிறது.

9. வரவு-செலவுத் திட்டம், 1987-88—பொது விவாதம்—(தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்றைய விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் 20 பேர் பங்கெடுத்துக் கொள்வதற்காகப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். எனவே பேசுகின்ற உறுப்பினர்கள் எக்காரணம் கொண்டும் 10 நிமிடத்திற்கு மிகாமல் உரையை நிகழ்த்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் நான் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பருவமழை பொய்த்த காரணத்தால் தமிழகம் பூராவும் இன்றைய தினம் பல்வேறு மாவட்டங்களில் வறட்சி நிலவிக்கொண்டு இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடுகிற மாவட்டம். தற்போது பருவமழை பொய்த்துவிட்ட காரணத்தினால் காவிரியில் சரியாக தண்ணீர் வரவில்லை. அப்படி தண்ணீர் வாராத காரணத்தால் அங்கே பயிர்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்படவில்லை.